بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# jamaat ul sahih al islam – tamil nadu



**ஜுமுஆ பேருரை**

**தலைப்பு :**

அல்லாஹ்வின் பண்புகள்

(பாகம் -8)


*ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ்*
*முனீர் அஹ்மது அஸீம் (அலை)*


*12 June 2020*

**(20 SHAWWAL 1441 AH)**


*வெளியீடு*

*அமீர்,*

*ஜமா அத் தமிழ்நாடு*

***Phone No:- 917502272774***

# THE ATTRIBUTES OF ALLAH (PART – 8)

## அல்லாஹ்வின் பண்புகள் (பாகம் -8)

உலகனைத்திலும் உள்ள தனது தோழர்களுக்கும் மற்றும் எல்லா முஸ்லீம்களுக்கும் ஸலாத்தினைத் தெரிவித்ததை தொடர்ந்து தஷஹ்ஹுத், தஅவ்வூது மற்றும் அல்ஃபாத்திஹா ஓதியபிறகு **ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஜும்மா பேருரையியை நிகழ்த்தினார்கள்.

**அவனே அல்லாஹ் அவனைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு இல்லை. அவன் அரசன், தூயவன், சாந்தியின் பிறப்பிடம் பாதுகாப்பு அளிப்பவன், கண்காணிப்பவன், வல்லவன், உடைந்த உள்ளங்களை இணைப்பவன், மிக மேலானவன் (5924)**

அல்முத்தக்கபீர் என்பது மிக மேலானவன் தனது மகத்துவத்தை உணர்ந்தவன். அனைவருக்கும் தனது மகத்துவத்தையும் சர்வலல்மையையும் பற்றி அறிவதற்கும் அறிவிப்பதற்கும் அல்லாஹ்வுக்கு மட்டுமே உரிமை உண்டு. அவன் தன்னை மகத்துவபடுத்திக்கொண்டு, பெருமையையும், மேன்மையையும் தனக்கு மட்டுமாக வைத்து அவன் பார்க்கிறான். எல்லா மகத்துவமும் அவனுக்கு உரியது. இந்த மனப்பான்மை முற்றிலும் நியாயமானது ஏனெனில் இது உண்மையாகும்.

அல்லாஹ் ஒரு பிரத்யேக மகத்துவத்தினாலும் ஒரு முழுமையான அரச பதவியாலும் வேறுபட்டவனாக இருக்கின்றான். அவன் எல்லாவற்றையும் கட்டுபடுத்துபவனாக இருக்கின்றான். அவன் எல்லாவற்றிலும் எல்லா வகையிலும் தனது மகத்துவத்தை வெளிப்படுத்துகிறான்.

ஆகவே என் சகோதர சகோதிரிகளே! நீங்கள் உங்களின் பௌதீகமான வாழ்கைக்கு அளிக்கும முக்கியத்துவத்தால் நீங்கள் உங்களையே ஏமாற்றி கொள்ளாதீர்கள். ஏனெனில் ஒரு முழுமையான மாற்றம் உங்களிடத்தில் ஏற்பட வேண்டும் என்பதே இறைவனின் விருப்பம். அவன் உங்களிடமிருந்து ஒரு வகையான மரணத்தை விரும்புகிறான். அதற்குப்பிறகு அவன் உங்களுக்கு ஒரு புதிய வாழ்கையை வழங்குவான். நீங்கள் மிக விரைவில் உங்களுக்கிடையே சமாதனத்தை ஏற்படுத்திக். கொள்ளுங்கள் உங்கள் சகோதர சகோதிகளின் குற்றத்தை மன்னியுங்கள். ஏனென்றால் தனது சகோதரருடன் சமாதனம் செய்ய விரும்பாதவர் துஷ்டனாவார் மேலும் அவர் தனது கருத்து வேறுபாட்டின் மூலமாக அவர் அல்லாஹ்விடமிருந்து விலகி வெகுதூரம் சென்றுவிடுவார்.

எனவே உங்கள் தவறான விருப்பத்தை விட்டுவிடுங்கள். நீங்கள் சொல்லது உண்மை என்றாலும் நீங்கள் தவறு செய்தவர்களைப் போல் தாழ்மையுடன் நடந்து கொள்ளுங்கள். அப்போதுதான் நீங்கள் மன்னிக்கபடுவீர்கள். உங்கள் தற்பெருமையை முற்றிலுமாக விட்டுவிடுங்கள். ஏனென்றால் நீங்கள் அழைக்கப்படவிருக்கின்ற வாசல் மிக குறுகியது. ஆகையால் தற்பெருமையையும்

அகங்காரத்தையும் கைவிடுங்கள். அவ்வாறேயானால் மட்டுமே அந்த வாசல் வழியாக உங்களுக்கு நுழைய முடியும்.

ஆகவே நீங்கள் கீழ்ப்படியாமலிருப்பதன் மூலம் பெறும் தண்டனையைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள். அதை போலவே என் சகோதர சகோதரிகளே, நீங்கள் கீழ்படிவதன் மூலம் பெறும் பரிசுகளைக் குறித்தும் நன்கு உணர்ந்துக் கொள்ளுங்கள்.

இறைவன் உங்களை அவன் நேசிக்கும் மக்களிடையே சேர்த்துவைப்பானாக! அவன் நேசிப்பவர்களுக்கு வழங்கும் பானத்தை அவன் உங்களுக்கு சுவைக்க வைப்பானாக! அவன் தனது வெறுப்பிலிருந்து உங்களை பாதுகாத்து, நிரந்தரமாக முன்னேறும் அந்த இயக்கத்தில் அவன் உங்களை சேர்த்துவைக்கட்டும். அந்த இயக்கமானது நம்பிக்கையாளர்களின் இயக்கமாகும். அந்த இயக்கத்தில் உலகெங்கிலுமுள்ள அனைத்து நம்பிக்கையாளர்களும் அல்லாஹ்வை வணங்குவதிலும், இஸ்லாத்தை பாதுகாப்பதிலும் ஓரே உடலைப் போன்று ஒன்றுபட்டு முன்னேறுகின்றனர். அந்த மக்களிடையே அவன் பேசவும் அவன் விரும்பிய தனது அடியார்களிடம் உறவு வைத்துக் கொள்ளவும் செய்கிறான். தங்களின் பார்வைகள் அவனை அடைய முடியாது என்பதை அவர்கள் உணரும்போது, அவன் தனது வெளிப்பாடுகள் மூலம் அவர்களுக்கு தன்னை வெளிப்படுத்திக் காட்டுகிறான். அவன் அவர்களுக்கு தனது அருகாமையின் வாசலை திறந்து, இறை உத்வேகங்களை அவர்களின் இதயங்களில் நிறைக்கின்றான். இதனால் அவன் அவர்களுக்காக வகுத்த இறைதிட்டத்தைக் குறித்து அவர்கள் சிந்திப்பதுடன் தங்களின் சுமைகளையாவும் அவனிடம் ஒப்படைக்கிறார்கள். தம்முடைய படைப்பினங்கள் மீது பொழியும் நுட்பமான நன்மைகளைக் கூட அவன் அவர்களுக்கு வெளிப்படுத்துகிறான். இதனால் அவர்கள் எல்லா வகையான கிளர்ச்சி மற்றும் அனைத்து தரப்பட்ட வீண் ஆட்சேபனையிலிருந்தும் விலகிகொள்கின்றனர். அவனிடம் அடைக்கலம் கொள்ளும் அவர்கள் இப்போது தங்களின் எல்லா விஷயங்களிலும் அவன் மீது முழுமையான நம்பிக்கை வைத்து முன் செல்லவும் செய்கின்றனர். ஏனென்றால் அந்நிலையில் அந்த அடியாள்கள் இறைவனை திருப்திபடுத்துவதன் மூலம் மட்டுமே திருப்தியைப் பெற முடியும் என்பதையும், அவன் கட்டளைக்கு அடிபணிவதன் மூலம் மட்டுமே இறை அடிமையாக முடியும் என்பதையும் அவர்கள் நன்கு உணர்ந்துவிடுகின்றனர். அத்தகைய நம்பிக்கையாளர்களைப் பொறுத்தவரை, இறைவனை தவிர மற்றவர்களுக்கு அவர்களின் உள்ளத்தில் இடமில்லை மேலும் அவர்கள் எவ்வித அபாயங்களுக்கும் ஆளாகமாட்டார்கள் ஏனெனில் நூற்றாண்டின் துரதிர்ஷ்டங்கள் அவர்களை பாதிப்பதில்லை. இறைவனின் உதவியால் மிக தீவிரமான பேரழிவுகளைக் கூட அவர்களால் சந்திக்க முடிகிறது.

அவனுடைய முடிவுகள் அவர்களுக்கு எதிராக அமைந்தால் கூட அவர்கள் அவனுடைய மகத்துவத்திற்கு முன்பாக சமாதனப்படுவதோடு அவனுடைய

அதிகாரத்திற்கு முன்பாக கீழ்ப்படிந்துவிடுகின்றனர். துரதிர்ஷ்டங்கள் அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்துப்படுகின்றன, ஆனால் அவர்களின் உள்ளம் எல்லா விதமான ஐய்யங்களிலிருந்தும் மீட்சியை பெற்றதாக இருக்கும்.

அல்லாஹ்வின் சங்கம் என்று கூறும் எவரும், பொருத்தமான வழிகளைப் பின்பற்ற வேண்டும். உங்களை தூய்மைப்படுத்துவதன் முதல் படியாக நீங்கள் உங்கள் சொந்த விருப்பத்தை கைவிடுவதோடு, இறைவிருபபத்திற்கு எதிராக கிளர்சியில் ஏற்படுவதிலிருந்து நீங்கள் விலகி நிற்க வேண்டும். பரலோகத்தில் இறைவனின் திருப்தியை உங்களுக்கு பெறவேண்டும் என்று நீங்கள் விரும்பினால், நீங்கள் ஒருவருக்கொருவர் உண்மையான சகோதரர்களாக இருங்கள். உங்களில் மிகப்பெரியவர் தன் சகோதரனின் தவறுகளை மிகவும் மன்னிக்கிறவரேயாவார் ஆனால் தனது பழிவாங்கும் உணர்வால் ஆதிக்கம் செலுத்துபவரும் மன்னிக்காதவரும் துரதிர்ஷ்டசாலி ஆவார். அத்தகைய நபர்கள் இறைவனின் அருளையும் ஆசிர்வாதத்தையும் இழக்கின்றனர்.

அநியாயக்காரன், கர்வமுடையவன், கெட்ட குணங்களைக் கொண்டவன் மற்றும் நேர்மையற்றவனால் அவனை அணுகமுடியாது. எனவே நீங்கள் இறைவனின் சாபத்திற்கு அஞ்சுங்கள். இறைவனின் நண்பர்களாக இருங்கள். அவன் உங்களுக்கு சாதகமாக இருக்கும்படி நேர்மையுடனும் உற்சாகத்துடனும் தாராள மனப்பாண்மையுடனும் நீங்கள் நடந்து கொள்ளுங்கள். உங்கள் சேவகர்கள், உங்கள் தொழிலாளர்கள், உங்கள் மனைவிகள் (பெண்கள் தங்கள் கணவர்களிடம்) மற்றும் உங்கள் ஏழை சகோதரர்களிடம் இரக்கமாயிருங்கள் அப்போதுதான் பரலோகத்தில் உங்களுக்கு கருணை காட்டப்படும்.

அத்துடன் மயோட்டா, கோமோரோஸ் மற்றும் மடகாஸ்கறிலுள்ள நமது சகோதர சகோதரிகளின் விஷத்தின் பக்கம் உங்கள் கவனத்தை திருப்ப நான் விரும்புகிறேன். இந்த மிக கடினமான சூழ்நிலைகளில் (கோவிட்-19) இருந்து மீட்சியை பெற நீங்கள் துஆ செய்யும்படி அவர்கள் கேட்டிருக்கின்றனர். நமது உன்னதமான நபி(ஸல்) அவர்களனின் முழு உம்மத்தையும் மறந்து விடாமல் தான், தற்போது பல்வகையான சிரமங்களை சந்திக்கும் நமது ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமைச் சார்ந்த நமது சகோதர சகோதரிகளைப் பற்றி சிந்திப்போம். நாம் இனவாதிகளாக இருக்ககூடாது. நம்பிக்கைகொண்ட நமது சகோதர்களைக்குறித்து மட்டுமல்ல, பாதிக்கப்படுகின்ற நம் சக மனிதர்களைக்குறித்தும் நாம் சந்திக்கவேண்டும். நாம் அனைவரும் மனிதர்களாவோம். அல்ஹம்துலில்லாஹ்! இந்த நாடுகளைச் சார்ந்த நமது உறுப்பினர்கள் (மயோட்டாவிலுள்ள ஒருவர், மற்றும் கொமோரோஸிலுள்ள இன்னொருவர்) அங்கு பள்ளிவாசல்களை நிர்மாணிப்பது பற்றி ஒரு உயரிய கனவை கண்டுள்ளர்கள். நமது பள்ளிவாசல் ஒளிமயமாக இருப்பதாகவும், நமது ஜமா அத்தில் அதிகமான எண்ணிக்கையை கொண்ட மக்கள் நுழைவதாகவும் அவர் கனவு கண்டனர். அதை போலவே கோமோரேஸிலுள்ள நமது சகோதரர் நம்முடைய ஒரு பள்ளிகூடத்தைப்பற்றி கனவு

**கண்டார். அல்லாஹ் இந்த கனவுகளை நனவாகட்டும். அல்லாஹ்வை திருப்திபடுத்தும் வகையில் நமது பள்ளிவாயில்களை கட்டுவதில் நாம் வெற்றி பெறுவோம். இன்ஷாஅல்லாஹ்.**

தற்போது உலகம் பலவிதமான பேரழிவுகளை சந்தித்து வருகிறது. கொரோனா வைரஸ்/கோவிட்-19 அவற்றில் ஒன்றாகும். எல்லா வகையான பேரழிவுகளும் உலகம் முழுவதும் அழிவை ஏற்படுத்தி வருகின்றன. மனிதகுலம் ஆபத்தில் உள்ளது! இஸ்லாம் ஆபத்தில் உள்ளது! இந்த உலகின் ஈர்ப்புகளுக்கு அடிமைகளாக்கப்பட்ட முஸ்லீம்களால் கைவிடப்பட்ட அதே இஸ்லாம! இன்று அவநம்பிக்கையாளர்களின் காரணமாக பல துரதிர்ஷ்டங்கள் நிகழ்கின்றன. அவர்களின் நோக்கமானது இஸ்லாம் மற்றும் முஸ்லீம்களை அழித்து, பொய்யான இறை நம்பிக்கையையும், தவறான கோட்பாடுகளையும் நிறுவுவதேயாகும்.

அவர்களில் நரேந்திரமோடி இந்தியாவில் மஸ்லீம்களுக்கு எதிராக தனது வெறுப்பை வெளிப்படுத்தி வருகிறார். அவரது அரசாங்கம் கடுமையாக நடவடிக்கைகளுடன் முஸ்லீம்களுக்கு எதிராக செயல்படுகின்றன. முஸ்லீம்களை முழங்காலில் கொணடுவந்து, இந்தியாவை பிரத்தியேகமாக ஒரு ஹிந்து நாடாக மாற்ற அவர் விரும்புகிறார். அண்மையில் அவரும் அவரது அரசாங்கமும் வெளிநாட்டு முஸ்லீம்கள் இந்தியாவுக்கு வருவதை தடை செய்துள்ளனர். அவர்கள் முஸ்லீம்களையும் இஸ்லாத்தையும் அழிக்கவும். சொந்த நாட்டில் அடிமைகளாக்கவும் பல தந்திரங்களைப் பயன்படுத்துகிறார்கள். அவரது முன்மாதிரியை பின்பற்றி நமது மொரீஷியஸின் பிரதமரும் நரேந்திர மோடியை தனது குருவாகவும் வழிகாட்டியாகவும் எடுத்துக் கொள்கிறார். மொரீஷியஸிலும் ஹிந்து விசுவாசிகள் இரண்டு குழுக்களாப் பிரிக்கப்பட்டுள்ளனர். மோடிக்கு ஆதரவானவர்கள் மற்றும் அவருக்கு எதிரானவர்கள். 13 மார்ச் 2020 தேதியன்று எல் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு திரு தேவ் விரா சுவாமி அவர்கள் அளித்த போட்டியில் இந்தியா மற்றும் மொரீஷியஸின் இந்த நிலைமை குறித்து அவர் தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளார். இந்தியாவில் சிறுபான்மையின மக்களின் நிலை குறித்து அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. மேலும் மொரிஷியஸில் கூட பிரவீந்து ஜஹன்நாது தனது இந்தியா குருவை பின்பற்றினால் மொரீஷியஸின் நிலைமையும் அவ்வாறாகிவிடும்.

ஹிந்து விசுவாசத்தின் சில இந்தியர்கள் மற்றும் இந்தே மொரிஷியர்களின் (இந்தியா வம்சவழியை சார்ந்த மொரிஷியஸ் மக்கள்) நோக்கமானது, ஹிந்து சட்டங்கள் மற்றும் சித்தாந்தங்களால் நிர்வாகிக்கப்படும் ஒரு பிரத்தியேக ஹிந்துத்துவ மாநிலம் அமைய வேண்டும் என்பதாகும். அந்த திசையில் நரேந்திர மோடியின் நடவடிக்கைகள் உண்மையில் கவலை அளிக்கின்றன.

அதன் விளைவாக, முஸ்லீம்கள் அல்லாதவர்களால் எழுப்பப்பட்ட கலவரங்கள் மற்றும் அரசியல் கலவரங்களும் முஸ்லீம்களுடையவும் இஸ்லாமுடையவும் அழிவுக்கு வழி வகுத்துள்ளது. ஆனால் அவர்களின் அத்தகைய

செயல்களை பார்வையிடும் ஒரு படைப்பாளன் இருக்கின்றான் என்பதை அவர்கள் மறந்துவிடுகின்றார்கள். முஸ்லீம்களின் உரிமைகளை பறித்து, அவர்களை துன்புறுத்திய சர்வாதிகாரிகள் மீது விழுந்த தண்டனைகளுக்கு மனித வரலாறு சாட்சியாக உள்ளது. நம்முடைய இந்த நூற்றாண்டில் தான், முன்னாள் இஸ்ரேலிய பிரதமந்திரி ஏரியல் ஷரோன் என்ன செய்தார் என்பதை பாருங்கள். அதன் பிறகு எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு வழிங்கிய அவலநிலையையும் நாம் கண்டோம். ஹஸரத் மோஸஸ் (அலை) அவர்களின் காலத்தில் ஃபர்வோன் மற்றும் ஹஸ்ரத் அப்ரஹாம் (அலை) அவர்களின் காலத்தில் நம்றுத்தீன் போன்ற சர்வாதிகாரிகளுக்கு என்ன நடந்தது என்பது நமக்கு தெரியும். அவை அனைத்து மனித குலத்திற்கு குறிப்பாக முஸ்லீம்களுக்கு சிந்திபதற்கான எடுத்துக்காட்டுகள் ஆகும்.

மனிதகுலம் ஆபத்தில் உள்ளது. ஆனால் அல்லாஹ் தனது தேர்ந்தெடுத்த அடியாரை, பரிசுத்த ஆவியோடு உங்களுக்கு சரியான பாதையை காட்டவும் ஷைத்தானின் பிடியிலிருந்து உங்களை மீட்டெடுத்து இறைவனின் பக்கம் கொண்டு வரவும் அனுப்பியிருக்கின்றான். அல்லாஹ்வின் அருளால், என்னை அவன் வழிகாட்டியாகவும், மனிதகுலத்தை குறிப்பாக முஸ்லீம்களை சரியான பாதையில் அழைத்து வருவதற்காகவும் என்னை தேர்வு செய்த அல்லாஹ்வுக்கு நான் முழுமனதுடன் நன்றி கூறுகிறேன். சர்வவல்லமையுள்ள இறைவன், தெய்வீக வெளிப்பாட்டின் அனைத்து அம்சங்களுக்கு சாட்சி அளிக்கவும், அந்த நூற்றாண்டின் அல்லாஹ்வின் தூதரின் உண்மையை ஏற்றுக்கொள்ளவும். பல இதயங்களை அவன் ஊக்கப்படுத்தியுள்ளான். அல்லாஹ்வின் அருளால் என் நேர்மையான தோழர்கள், ஆன்களும் பெண்களும், குழந்தைகளும், வானத்தை ஒளிரச் செய்யும் நட்சத்திரங்களைப் போன்று திகழ்கின்றனர். அதே போல் இந்த நூற்றாண்டின் கலீஃபத்துல்லாஹ்வுக்கு கீழ்படிந்து, அல்லாஹ்வின் வழியில் பக்தியுடன் பணியாற்றுவதற்கான ஆழமான விருப்பத்தை அவர்கள் நிருபிக்கும் போது, அல்லாஹ் அவர்களை ஆசிர்வதித்து, உலகில் தன் ஒளியை உறுதிப்படுத்த அவர்களுக்கு ஓர் ஒளியை வழங்குகிறான்.

ரமலான் காலத்திலும் அதை தொடர்ந்து இன்று வரையிலும் என் தோழர்களில் பலர் பொறுமையாகவும் இறைவன் மீது முழு நம்பிக்கை வைத்துள்ளவர்களாகவும் இருக்கின்றார்கள். குறிப்பாக பல வழிகளில் அவர்கள் மீது வரும் அபாயங்களை அவர்கள் சந்தித்து வரும்போதிலும், அவர்கள் தங்கள் மன தைரியத்தை இழந்துவிடாமல், அசாதாரண முறையில் தங்கள் நேர்மையை வெளிப்படுத்துகிறார்கள். **அவர்களில் தாவா/தப்லீக் மற்றும் மொழிபெயர்ப்பின் அடிப்படையிலும், இறை வழியில் மிகவும் அர்பணிவுடன் நிலைகொள்வதிலும் ஆற்றல் வாய்ந்த ஒரு பெண்மணி இந்தியாவில் கேரளாவைச் சார்ந்த நாயிப் சதர் பௌஷியா ஷெயின் சாஹிபா ஆவார். அல்லாஹ் அந்த பெண்மணி மீது பல வழிகளில் அருட்களை பொழிந்திருக்கின்றான். ரமலானின் 27- ம் இரவில் அந்த**

**பெண்மணி ஒரு முக்கியமான கனவைக் கண்டார். அக்கனவில் தன் மகன் சகரியா துவா செய்து கொண்டிருபதையும், "இந்துஸ் (சிந்து) அதிக சப்தத்துடன் ஒலிக்கிறது, பயப்படவேண்டாம்" என்று ஒலிபெருக்கி மூலம் அவன் அறிவிப்பதையும் கண்டார்கள். அக்கனவில், அவர் இந்த வார்த்தைகளை ஒரு இருக்கையில் உட்கார்ந்திருந்து ஒரு நோட் புக்கில் எழுதுவதை கண்டார்கள். அவர் சுஹர் நேரத்தில் எழுந்தபோது அவர் படுக்கையில் உட்கார்ந்திருப்பதாக கண்டார்கள். அல்லாஹ் அக்பர்.**

நீங்கள் ஏற்கனவே அறிந்தபடி, ஆசியாவில் சிந்து என்று அழைக்கப்படும் ஒரு நதி உள்ளது. அது சீன, அந்தியா மற்றும் பாக்கிஸ்தான் வழியாக பாய்கிறது.

இந்துஸ் (சிந்து) என்ற இந்த முக்கியமான கனவில், ஏற்படக்கூடிய பேரழிவுகளை அல்லாஹ் குறிப்பிடுகின்றான். ஆனால் நம்பிக்கையாளார்களுக்கு இறை உதவி வரும். அக்கனவு சிந்து நதியின் மற்றும் பிற பேரழிவுகளையும் குறிக்கமுடியும். அதன் விளைவாக இந்த கனவைத் தொடர்ந்து "நிசர்கா" சூறாவளி ஏற்பட்டது. இது இந்தியாவில் மகாராஷ்டிரா மற்றும் மேற்கு வங்காளத்தில் பல அழிவுகளை ஏற்படுத்தியது. இதை கூடாமல் மற்ற பேரழிவுகளும் வரலாம். ஆனால் நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை வைப்பதுடன் அவனுடைய வழியில் உழைக்க வேண்டும். மேலும் அவர்களின் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

மனிகுலமே! முஸ்லீம் சகோதர சகோதரிகளே! ஜமாஅத்து இஸ்லாமின் உறுப்பினர்களே! இத்தகை பேரழிவுகள் மற்றும் அபாயங்களிரிருந்து பாதுகாப்பைப் பெற அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பிடித்துக் கொள்ளுங்கள். நேர்மையாக செயல்படுங்கள். வானத்திலிருந்து ஆணை பிறக்காமல் பூமியில் எந்த ஆபத்தும் ஏற்படுவதில்லை. வானத்திலிருந்து கருணை இறங்காமல் பூமியல் ஏற்பட்ட ஆபத்து நீங்குவதுமில்லை. என் சகோதர சகோதரிகளே! நீங்கள் இறைவனில் விரக்தியடைய வேண்டாம். நிச்சயமாக இறைவன் மிகவும் இரக்கமுள்ளவன். அவன் நமது சோதனை மற்றும் சிரமங்களை உணர்கின்றான். ஒவ்வொரு நாளும் இறைவன் நம்முடைய பல பாவங்களைட மன்னிக்கின்றான். தனது கருணையை இறைவன் நம் மீது பொழிந்துவாறு இருக்கிறான். நீங்கள் யாரையும் நேசிப்பதைவிட இறைவனை நேசியுங்கள். நீங்கள் ஏக இறைவனை வழிபட்டு அவனிடம் சென்றால், அவன் உங்கள் எல்ல பாவங்களையும் மன்னிபான். நீங்கள் மனந்திருபிக் கொண்டால், அவன் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறான். நீங்கள் அவனை நோக்கி ஒரு அடி வைத்தால் அவன் உங்கள் பக்கம் ஓடி வருகின்றான்.

ஆகவே, தாழ்மையும், இரக்கவும் உள்ளவராக இருங்கள். உங்கள் சகமனிதர்களிடம் உண்மையான அனுதாபத்தைக் கொண்டிருங்கள். இதனால் இறைவன் உங்களை ஏற்றுக்கொள்வான். சர்வ வல்லமையுள்ள, எந்த எவ்வித மாற்றத்திற்கும். உட்படாத நிரந்தர பண்புகளைக் கொண்ட ஒரு இறைவன் அனைத்தையும் படைத்து, பரிபாலனம் செய்பவனுமாகிய ஓர் படைப்பாளன்

உங்களுக்கு இருக்கின்றான என்பதை நிச்சயமாக நீங்கள் அறிந்து கொள்வது அவசியம்.

அல்லாஹ் நம்முடைய முயற்ச்சிகளையும் நமது துவாக்களையும் ஏற்றுக் கொள்வானாக, ஆமீன். இன்ஷா அல்லாஹ், அடுத்த வாரம் இதே விஷயத்தில் தொடர்ந்து உரையாற்றுவதற்கான தவ்.'.பீக் அல்லாஹ் எனக்கு வழங்குவானாக ஆமீன்

**Translated by:**

**Azim Ahmad**

**Editing & Publishing are done by**
***AMIR***
***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***
***TAMIL NADU***
**Ph No: 917502272774**